BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

# பாரதியும் புதுமைப் பெண்ணும்
# Bharathi and the Modern Woman

**நெறியாளர் : திருமதி. கி. ஜோதிமணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
**ஆய்வாளர் : சு. மதிவதனா**
தமிழ் இலக்கியம்- முதுகலை 2 ஆம் ஆண்டு, சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

**Guide Name : Mrs.K.Jothimani**
Assistant Professor in Tamil, Sakthi College Of Atrs And Science For Women, Oddachathiram.
**Student Name : S.Mathivathana**
Second Year, M.A. Tamil Literature, Sakthi College Of Atrs and Science for Women, Oddanchatram, Dindigul District.

**Abstract**

Mahakavi Bharathi was a poet who served as a spark for the renaissance of Tamil society. In an era deeply rooted in slavery, superstition, and patriarchal thinking, he elevated women as symbols of knowledge, self-respect, and freedom. The "modern woman" depicted in Bharathi's poems is a pioneer of social change; she is educated, self-confident, and seeks equal rights. She is not confined to the four walls of her home; she is a force that participates equally in social, political, and cultural spheres. Therefore, the topic "Bharathi and the Modern Woman" serves as an important area of study for exploring Bharathi's feminist thoughts and the modern concept of womanhood that they fostered. The objective of this article is to analyze the characteristics of the modern woman that Bharathi envisioned.

**Key words**: Bharathi, Modern Woman, feminist thoughts**,** Bharathi's poems

**ஆய்வுச் சுருக்கம்**

மகாகவி பாரதி, தமிழ்ச் சமூகத்தின் மறுமலர்ச்சிக்கு ஒரு தீப்பொறியாகத் திகழ்ந்த கவிஞர். அடிமைத்தனம், மூடநம்பிக்கைகள் மற்றும் ஆணாதிக்கச் சிந்தனைகளில் ஆழமாக வேரூன்றியிருந்த ஒரு காலகட்டத்தில், அவர் பெண்களை அறிவு, சுயமரியாதை மற்றும் சுதந்திரத்தின் சின்னங்களாக உயர்த்தினார். பாரதியின் கவிதைகளில் சித்தரிக்கப்படும் 'நவீனப் பெண்' சமூக மாற்றத்தின் முன்னோடியாகத் திகழ்கிறாள்; அவள் கல்வி கற்றவளாகவும், தன்னம்பிக்கை கொண்டவளாகவும், சம உரிமைகளை நாடுபவளாகவும் இருக்கிறாள். அவள் தன் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் முடங்கிக் கிடப்பவள் அல்ல; சமூக, அரசியல் மற்றும் கலாச்சாரத் துறைகளில் சமமாகப் பங்கேற்கும் ஒரு சக்தியாக விளங்குகிறாள். எனவே, பாரதியின் பெண்ணியச் சிந்தனைகளையும், அவை வளர்த்தெடுத்த நவீனப் பெண்மைக் கருத்தையும் ஆராய்வதற்கு, "பாரதியும் நவீனப் பெண்ணும்" என்ற தலைப்பு ஒரு முக்கியமான ஆய்வுப் பொருளாக அமைகிறது. பாரதி காண விரும்பிய நவீனப் பெண்ணின் குணாதிசயங்களை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள் :** பாரதி, புதுமைப்பெண், பெண்ணிய சிந்தனைகள், பாரதி கவிதைகள்

**பாரதியின் பார்வையில் பெண்கள்**

பெண்கள் இல்லத்திற்குரியவர்கள் என்ற கருத்து பண்டைக் காலம் தொட்டு நிலைநிறுத்தப்பட்டதாகும். இல்லாள், இல்லத்தரசி, மனைகிழத்தி மனையாள், மணவாட்டி, மனைவி என்ற சொற்கள் அதன் அடிப்படையில் பிறந்தவைகளே. இல்லத்திற்குள்ளும் பெண்கள் எல்லா இடங்களிலும் தன்னிச்சையாக இயங்க இயலாது. முன்கட்டு ஆண்களுக்கும் பின்கட்டுப் பெண்களுக்கும் உரியதாக இருந்தது. பின்கட்டில் குறிப்பாக சமையலறையே பெண்களின் அதிகபட்ச இருப்பிடமாக இருந்திருக்கிறது. என்பதை, "சமையலறையில் என் கண்களைக் கட்டிவிட்டாலும் எந்தப் பொருளிலும் விரல் படாமல் கேட்டப் பொருளைக் கேட்ட மாத்திரத்தில் எடுத்துத் தருவேன் என்று சவால் விடவும் செய்கிறாள்.

அங்கிருந்து அவளிடம் சொல்லிக் கொள்வதில்லை, நான் நீ மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அங்கேயிருக்கிறாய் என்று", வேடிக்கையாக பேசுவதுபோல் இன்றைய எழுத்தாளர்கள் எடுத்துரைப்பதன் வாயிலாக பெண்ணின் விடுதலைக்கு குறள் கொடுக்கின்றனர் என்றாலும் அவர்களின் இந்த பெண்விடுதலை எண்ணத்திற்கு வித்திட்டவர் பாரதியாவார்.

**பாரதியும் ஷெல்லியும்**

பாரதி புதுமைப் பெண்ணைத் தம் கற்பனைக் கண்கொண்டு பார்த்து, தம் கவிதையில் அடையாளப்படுத்தினார். பாரதி படைத்து காட்டிய "புதுமைப் பெண்" இந்திய மண்ணில் அதற்கு முன் வேறு எவரும் உருவாக்கிக் காட்டாத படைப்பாகும். விடுதலை இந்தியாவில் சுதந்திரமாக உலாவப்போகும் அப்புதுமைப் பெண்ணை முன்கூட்டியே சிந்தித்துப் படைத்திருக்கின்றான் பாரதி. கவிதைகளில் மட்டுமின்றி அவரின் கதைகள், கட்டுரைகளிலும் புதுமைப் பெண்ணின் அடையாளத்தை கண்டுகொள்ள இயலும். புதுமைப் பெண்ணை உருவாக்குவதில் பாரதிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஆங்கிலக் கவிஞன் "ஷெல்லி" ஆவான். அவன் பெண்விடுதலையில் தீரா ஆர்வம் கொண்டவன். "Can man be free if woman be a slave?" என்ற ஷெல்லியின் வரிகளே "மாதர் அடிமைகளாக நிற்ப, ஆடவர் எவ்வாறு சுதந்திரமாக இருக்க இயலும்?" என்ற வரிகள் பாரதியின் கட்டுரையில் காட்சியளிக்க காரணமாக அமைகின்றன.

**புதுமைப் பெண்ணும் - மரபுப் பெண்ணும்**

பாரதி பெண்களை மரபுப்பெண், புதுமைப் பெண் என இரண்டாக வகைப்படுத்திக் கூறுகின்றார். காலங் காலமாக அடிமைப்பட்டு கிடக்கும் மரபுப் பெண்களைப்போல் அல்லாது இன்றைய பெண்கள் புரட்சி எண்ணம் கொண்ட புதுமைப் பெண்களாக இருக்க வேண்டும் என்று கூறினாலும் அவர் புதுமைப் பெண்ணை மரபுப் பெண்ணுக்கு எதிரானவளாக காட்டவில்லை. மாறாக மரபுப் பெண்ணை அடிமைத்தளையிலிருந்து விடுவித்து அவர்களுக்குப் புத்துணர்வும், புதுப்பொலிவும், புத்தெண்ணங்களும் தந்துள்ளார். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் பாரதியின் புதுமைப்பெண் பண்பாட்டுத் தளத்திலிருந்து தோற்றம் பெற்று விடுதலை நாட்டமும், உரிமை உணர்வும் கொண்டவளாகத் திகழ்கிறாள். இதைப் பாரதியே, "புதுமைப் பெண்ணவள் சொற்களும் செய்கையும் பொய்மை கொண்ட கவிக்குப் புதிதன்றிச் சதுமுறைப்படி மாந்த ரிருந்த நாள் தன்னிலே பொதுவான வழக்கமாம்" (புதுமைப் பெண், பா.6) என்று தம்பாடலில் சுட்டிக்காட்டியுள்ளதை நம்மாள் அறிந்துகொள்ள முடிகின்றது. மொத்தத்தில் "பெண்ணடிமை சமூகத்தை மாற்றி புத்தெழுச்சி கொண்ட சமூகம் படைப்பவளே பாரதி கண்ட புதுமைப் பெண்" என்பதை, "சேற்றி லேபுதி தாகமு ளைத்ததோர் செய்யத் தாமரைத் தேமலர் போலொளி தோற்றி நின்றனை பாரதநாட்டிலே துன்ப நீக்கும் சுதந்திர பேரிகை சாற்றி வந்தனை மாதரசே யெங்கள் சாதி செய்த தவப்பயன் வாழி நீ " என்ற தனது பாடலில் புதுமைப்பெண்ணின் புரட்சித் தன்மையை விவரித்திருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

**இல்லறம் என்பது பெண்ணறம்**

புதுமைப் பெண், இந்தியப் பண்பாட்டின் அடிப்படைக் கூறான இல்லறம் என்னும் நல்லறம் பேணுபவள். அதனால் அவள் நடமாடும் சக்தி நிலையம், நன்மனைத் தலைவி, மகாசக்தி, காளியின் குமாரி என்றெல்லாம் பாரதியால் போற்றப்படுகிறாள். வாழ்க்கையில் ஒரு நாள்போல் மற்றொருநாள் இருப்பதில்லை நாளும் ஒரு அனுபவம் தரும் இல்லத்தைப் போற்றிப் புரப்பவள் பெண். அவள் லௌதீக வாழ்க்கையின் உயிர்நாடி. அவள் இல்லாவிட்டால் இல்லம் இல்லை. இல்லறம் என்பது பெண்ணறம் என்பதை,

*"காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்*
*காரியம் யாவினும் கைகொடுத்து*
*மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்*
*மாட்சி பெறச் செய்து வாழ்வமடி"*

*(பெண் விடுதலைக் கும்மி, பா.8)*

என்ற பாடலடிகளின் வாயிலாகவும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இல்லறத்தில் பெண்ணுக்குக் கிடைக்கும் மனைவி, தாய் என்ற இரண்டு இடங்களும் போற்றுதற்குரியன என்பதை, "வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்" (பெண்மை, பா.3) என்ற அடிகள் வாயிலாக சுட்டிக்காட்டியுள்ளார். பெண்மை என்பது தன்மை, இன்பம், நற்புண்ணியம், அன்பு, அமைதி, ஆசை, காதல் என்பவற்றைத் தரவல்லது. துன்பம் தீர்த்து இன்பம் சேர்ப்பது, வலிமை தருவது, மானம் சேர்ப்பது என்று இல்லறத்தில் பெண்களின் மேன்மையை தம் கவிதைகளில் எடுத்து இயம்புகின்றார்.

**பெண்விடுதலையும் தேசவிடுதலையும்**

இல்லத்தில் கணவனும் மனைவியும் சம அந்தஸ்துடன் வாழ வேண்டும். தம்மால் முடிந்தவரை ஒருவருக்கொருவர் தம் தேடுதல் அவர்களின் கடமையாகும். கணவன் மனைவியை அடிமையாக நடத்தக்கூடாது. ஏனெனில் மனைவி கணவனுக்கு உயிர்த்துணை, வாழ்க்கைக்கு ஊன்றுகோல், ஜீவனிலே ஒரு பகுதி, சிவனும் பார்வதியும் போல, விஷ்ணுவும் இலட்சுமியும் போல இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாது வாழ்பவள். அதனால் குடும்பத்தில் இருக்கும் பெண்கள் விடுதலை அடைய வேண்டும். குடும்பத்தில் விடுதலை இல்லாவிட்டாள் தேசத்தில் விடுதலை இராது என்று கூறுவதன் வாயிலாக பெண் விடுதலையே நாட்டின் விடுதலைக்கு உதவும் என்பதை தமது கட்டுரையில் எடுத்து இயம்பியுள்ளார்.

**கல்வியில் சிறந்த பெண்கள்**

பெண்ணடிமைக்கு பெண் கல்வியின்மையும் முக்கிய காரணமாகும். இதை பாரதி தமிழ்நாட்டு சகோதரிகளே உங்களிடம் எத்தனையோ அரிய திறமைகளும், தந்திரங்களும் உயர்ந்து இருந்த போதிலும் கல்வியின் பரவுதல் அதிகமில்லாதபடியால் அவ்வப்போது வெளியுலகில் நிகழும் செய்திகளையும், மாறுதல்களையும் நீங்கள் அறிந்து கொண்டு அதற்குத் தக்கபடி நடக்க இடமில்லாமல் போகிறது. பெண்களிடையே கல்வி பரவுமாயின் இவ்விதமான தப்பெண்ணங்கள் தாமே விலகிப் போய்விடும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். பெண்கள் கல்வி கற்றால் அவர்களிடம் காணப்படும் அறியாமை நீக்குவதோடு அக்குடும்பத்தின் குழந்தைகளும் நலம் பெறுவர் என்பதை, "நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகும் நீசத்தொண்டும் மடமையும் கொண்டதாய் தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல் சாலவே யரியாதவதோர் செய்தியாம்" (புதுமைப் பெண், பா.5) என்ற அடிகளில் சுட்டிக்காட்டுகிறார். மேலும் "பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம் பேதைமை அற்றிடும் காணீர்" என்று உலகம் பேதமை நீங்கி வாழவேண்டும் என்றால் பெண்கல்வி முக்கியம் என்று விளக்கியுள்ளார்.

**பல்துறை வல்லால் பெண்**

பெண்கள் அரசியல், மருத்துவம் தொழில்த்துறை, விஞ்ஞானம், காவல்துறை போன்ற பல துறைகளிலும் வல்லவர்களாக விளங்க வேண்டும். அப்பொழுது தான் சமுதாயத்தில் அவர்கள் எதிர்பார்க்கும் விடுதலை, சமத்துவம், நாகரிகம், விழிப்புணர்வு, புகழ், மதிப்பு போன்றவை கிடைக்கும் என்று கூறியுள்ளார். இவற்றை,

*"சாத்திரங்கள் பலபல கற்பராம்*
*சவுரியங்கள் பலபல செய்வராம்*
*மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்*
*மூடக்கட்டுகள் யாவுந் தகர்ப்பராம்"*
*(புதுமைப் பெண், பா.9)*

என்ற கவிதை வரியின் வாயிலாக நம்மாள் அறிந்து கொள்ள முடிகின்றது.

**கற்புடை மாதர்**

இல்லற வாழ்வில் ஆண் பெண் இருவருக்கும் கற்பு மிக இன்றியமையாதது என்று பாரதி எடுத்துரைத்துள்ளார். இதனை,

*"கற்பு நிலையென்று சொல்லவந் தாரிரு*
*கட்சிக்குமஃது பொதுவில் வைப்போம்"*
*(பெண் விடுதலைக் கும்மி,பா.5)*

என்று கூறும் அவர். ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால், அப்பொழுது பெண்மையும் கற்பழிந்திடாதோ? என்று கேட்கும் அவர் பெண்களிடத்துக் கற்பை மிகுதியும் வலியுறுத்தியுள்ளார். கற்புடைய பெண்களால் இல்லம் உயர்வடைவதுடன் நாடும் உயரும் என்பதை,

*"..... மாதர்தம் கற்பின் புகழினிலே உயர்நாடு....."*

என்ற அடிகளில் வலியுறுத்தியுள்ளார்.

**பாரதியும் - பாஞ்சாலியும்**

அறிவு, துணிவு, வீரம், பத்தினித் தன்மை உரிமையை நிலைநாட்ட முற்படல், ஆணுக்கு சமமாகத் தன்னை உணர்ந்து கருத்துக்களை முன் வைத்தல் - என்ற அனைத்துப் பரிமாணங்களிலும் பாரதியின் புதுமைப் பெண்ணாக பாஞ்சாலி காட்சியளிக்கிறாள். அவள் தன்னை அழைக்க வந்த தேர்பாகனிடம்,

*"வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்*
*தாம் என்னை முன்னே கூறி யிழந்தாரா?*
*தம்மையே முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?"*
*(பாஞ்சாலி சபதம், பா.8,4-40)*

என்று கேட்கிறாள். பின் துயில்லுரியும் போது,

*"கௌரவ வேந்தர் சபைதனில் - அறங் கண்டவர்*
*யாவரும் மில்லையோ?"(பாஞ்சாலி சபதம், பா.53)*

என்று தனக்கு ஏற்பட்ட அவளத்திற்கு சமுதாயத்தை எதிர்த்து குறள் கொடுக்கின்றாள். இத்தகைய பாஞ்சாலியின் குணங்களே புதுமைப்பெண்ணின் குணங்களாக இருக்க வேண்டுமென்று பாரதி எடுத்துரைக்கின்றார்.

**முடிவுரை**

- ✓ பாரதியின் "புதுமைப்பெண்", இந்திய இலக்கியப் பாரம்பரியத்தில் அதுவரை சுட்டப்படாதவள்.
- ✓ பாரதி,"புதுமைப்பெண்" என்ற கருத்தாக்கத்தை ஆங்கிலக் கவிஞனான ஷெல்லியிடமிருந்து பெற்றிருந்தாலும் அவள் நம் மண்ணின் மரபுக்கேற்ப பாரதியின் கற்பனையில் உருவான பெண்ணே ஆவாள்.
- ✓ பாரதியின் "புதுமைப்பெண்" மரபுப் பெண்ணிற்கு எதிரானவள் அல்ல, மாற்று ஆவாள்.
- ✓ புதுமைப்பெண் - கல்வி, வீரம், நல்லறம், அஞ்சாமை, கற்பு, ஆண் - பெண் சமத்துவ உணர்வு.
- ✓ செம்மைத்தன்மை என்ற குணங்களை உடையவள். மூடப் பழக்கங்களுக்கும், பெண்களை முடக்கி வைக்கும் மரபுக் கட்டுக்களுக்கும் எதிரானவள் என்றாலும் பழம் இந்திய மரபான குடும்பத்திற்கு எதிரானவள் அல்லள்.
- ✓ புதுமைப் பெண்கள் ஆணாதிக்க சமூகத்தை மாற்றி ஆண் -பெண் சமத்துவ சமூகத்தை உருவாக்க வந்தவர்கள்.

- ✓ . பாரதியின் "புதுமைப்பெண்"ணின் மாதிரி வடிவமே (Role Model) பாஞ்சாலி ஆவாள்.

மகாகவி பாரதி தமிழ்ச் சமூகத்திற்கு அளித்த மிகப் பெரிய சிந்தனைக் கொடை "புதுமைப் பெண்" என்ற கருத்தாகும். பெண்ணை அறிவின் ஒளியாகவும், சமூக மாற்றத்தின் மையமாகவும் அவர் உயர்த்தினார். பெண்களின் விடுதலை இல்லாமல் சமூக விடுதலை சாத்தியமில்லை என்ற அவரது சிந்தனை, இன்றைய காலத்திலும் வழிகாட்டியாக விளங்குகிறது. ஆகவே பாரதியின் பெண்ணிய சமத்துவம் நிறைந்த சமூகத்தை உருவாக்கும் அடித்தளமாகத் திகழ்கிறது.

**துணை புரிந்த நூல்கள்**

1. அரசு. வ.,பாரதியும் பெண்ணியச் சிந்தனையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல் பதிப்பு 2002.
2. சுப்பிரமணிய பாரதி, பாரதியார் கவிதைகள், கழக வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு1950.
3. சுப்பிரமணிய பாரதி, பெண்கள் விடுதலை, பாரதி நூல் நிலையம்,சென்னை, முதல் பதிப்பு1978.

**Funding**

No funding was received for conducting this study.

**Conflict of interest**

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.